# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2047/25 - 2017 නොවැම්බර් මස 28 වැනි අඟහරුවාදා - 2017.11.28

**2047/25 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I - தொகுதி (I) பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான்,*

1. *2015.10.14 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 22/99* (xxxi) *அல்லது 2016.06.24 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றிக்கை இல. 22/99* (xxxii) *மற்றும் அவற்றுடன் தொடர்புபற்ற ஏனைய திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக் கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி, இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் ஒருவரினால், 2017.11.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினைக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்டு, 2018.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் மீது ஏற்புடையதான உற்பத்தி வரி விகிதமானது, 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும் எனவும் ;*

2. *2016.07.14 ஆந் திகதிய, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இல. 01/2016 மற்றும் அதற்குப் பிற்பட்ட திருத்தங்கள் என்பவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பயன்படுத்தி, அரச உத்தியோகத்தர் ஒருவரினால், 2017.11.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினைக் கொண்டு இறக்குமதி செய்யப்பட்டு, 2018.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் மீது ஏற்புடையதான உற்பத்தி வரி விகிதமானது, 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட 2017.06.09 ஆந் திகதிய 2022/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் என்பன மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் என்பனவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும் எனவும் ;*

3. *2016.10.31 ஆந் திகதிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 210*(iii) *ஆம் இலக்க, சுற்றறிக்கை மற்றும் அவற்றுடன் தொடர்புற்ற திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பயன்படுத்தி, அரச உத்தியோகத்தர் ஒருவரினால், 2017.11.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்டு, 2018.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட*

மோட்டார் வாகனம் ஒன்றின் மீது ஏற்புடையதான உற்பத்தி வரி விகிதமானது, 2016.11.10 ஆந் திகதிய, 1992/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட 2017.07.11 ஆந் திகதிய, 2027/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் என்பனவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும் எனவும் ;

4. 2017.11.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினைக் கொண்டு 2018.04.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட, இ. மு. தலைப்பு இல. 87.03 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட, 1, 300 கன செ. மீ. க்கு மேற்பட்டதும் 1, 500 கன செ. மீ. க்கு மேற்படாததுமான இயந்திரக் கொள்ளளவினைக் கொண்ட மோட்டார் வாகனம் ஒன்றின் மீது ஏற்புடையதான உற்பத்தி வரி விகிதமானது, 2016.11.10 ஆந் திகதிய 1992/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும் எனவும் ;

5. மேலே 01 முதல் 04 வரையான பந்திகளில் விபரிக்கப்பட்ட அத்தகைய வாகன இறக்குமதியின் போது 2017.11.09 ஆந் திகதிய 2044/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உற்பத்தி வரி விகிதத்தினை ஏற்புடையதாகாதிருத்தல் வேண்டும் எனவும்,

6. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட, 2017.11.15 ஆந் திகதிய 2045/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள கட்டளை இத்தால் இரத்துச்செய்கிறது எனவும்,

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2017.11.16.

01 - 331

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.